Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 06 திங்கட்கிழமை (17-02-1997) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர்: 82

# வவுனியாவிலிருந்து மிக விரைவில் பெரும் எடுப்பில் படை நடவடிக்கை?

## ஏற்பாடுகள் தீவிரம்

கொழும்பு, பெப்ரவரி 17

வவுனியா நகரில் இருந்து மிக விரைவில் பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பமாவதற்கான அறிகுறிகள், ஆரவாரங்கள் தென்படுவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இந்த நடவடிக்கைக்கான ஏற்பாடுகள் வவுனியாவில் தீவிரமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ வண்டிகளின் நகர்வுகளும், இராணுவ அம்புலன்ஸுகளின் ஓட்டமும் வவுனியா நகரில் திடீரென அதிகரித்துள்ளன.

வவுனியா — கிளிநொச்சி தரைவழிப் பாதையை மீண்டும் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதே உத்தேசப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 3 மின் கோபுரங்கள் வவுனியாவில் தகர்ப்பு!

கொழும்பு, பெப். 17

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவின் புறநகர்ப் பகுதியான தோணிக்கல்லில் மூன்று மின் கோபுரங்கள் இனந் தெரியாதவர்களால் தகர்க்கப்பட்டதால் வவுனியாவுக்கான மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டது.

மின்சாரசபை ஊழியர்கள் திருத்த வேலைகளை மேற்கொண்டு மின்சார விநியோகத்தைச் சீராக்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## செல்லச்சாமியின் மனைவி ஐ.தே.க.பட்டியலில்இல்லை

கொழும்பு, பெப். 17

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர்களின் பட்டியலில் எம். எஸ். செல்லச்சாமியின் மனைவிக்கும், மகனுக்கும் இடமளிக்கப்படவில்லை என்ற தகவல் தற்போது வெளிவந்துள்ளது.

இதனையடுத்து கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் தாம் நடுநிலை வகிக்கப் போவதாகச் செல்லச்சாமி அறிவித்துள்ளார்.

அதே நேரம் —

செல்லச்சாமியின் மற்றொரு மகன் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவில் போட்டியிடும் — கே. கணேசலிங்கம் தலைமையிலான — சுயேச்சைக் குழுவின் பட்டியலில் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3-150)

## பாபாவைத் தரிசிக்க பெங்களூருக்கு அனுரா!

கொழும்பு, பெப். 17

நேற்று முன்தினம் தனது 48 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய கையோடு நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க ஸ்ரீசத்ய சாயி பாபாவின் தரிசனம் பெறுவதற்காக பெங்களூர் பயணமானார்.

அவருடன் மேலும் பத்துப்பேரும் சாயி தரிசனத்துக்கு சென்றுள்ளனர்.

இ. தொ. கா. செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் அனுராவின் இந்தப்பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

(உ-3-150)

## கொக்குவிலில் தேடுதல்

யாழ்ப்பாணம், பெப். 17

கொக்குவில் மேற்குப் பகுதியில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை படையினர் சுற்றிவளைப்புத் தேடுதலில் ஈடுபட்டனர். அப்பகுதிகளில் உள்ள வீடுகளில் இருந்த அனைவரும் பிடாரி வைரவர் ஆலயப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும், தலையாட்டி முன் நிறுத்தப்பட்டதாகவும் தெரிகின்றது. இத்தேடுதலின் போது கைதானோர் விவரம் தெரியவரவில்லை.

இதேவேளை —

நேற்று முற்பகல் தேடுதல் நடைபெற்ற பகுதியில் வேட்டுச் சத்தங்கள் கேட்டன. எனினும் சேதவிவரம் தெரியவில்லை.

(உ-135)

## சிகரெட், மதுபான விளம்பரங்களுக்குத் தடை!

கொழும்பு, பெப். 17

தனியார் மற்றும் அரச தொலைக்காட்சியில் சிகரெட் மற்றும் மதுபானம் தொடர்பான விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

(உ-3)

## மற்றொரு விமானம் வீழ்ந்துநொறுங்கியது?

மணிலா, பெப். 17

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான — இஸ்ரேல் தயாரிப்பான — மற்றொரு தானியங்கி உளவு (யு. ஏ. ஈ) விமானம் ஐந்து நாள்களுக்கு முன்னர் அனுராதபுரம் இராணுவ விமானத் தளத்துக்கு அருகில் வீழ்ந்து நொறுங்கியதாகவும் —

ஆனால் இது பற்றிய தகவல்களை வெளியே விடாமல் படைவட்டாரங்கள் தடுத்து விட்டதாகவும் —

எனினும் இந்த இரகசியம் இப்போது வெளியே கசியத் தொடங்கியுள்ளதாகவும் —

வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது. ஆனால் விமானம் வீழ்ந்தது பற்றிய செய்தியை வேறு செய்தி நிறுவனங்கள் வெளியிட்டதாகத் தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவகை உளவு விமானம் ஒன்று கடந்த மாதம் பூநகரிப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியது தெரிந்ததே.

(உ-3)

## இரத்தினபுரியிலிருந்து தலைநகருக்கும் வன்முறை பரவியது!

கொழும்பு, பெப். 17

இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெல சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து இரத்தினபுரியில் இடம்பெற்ற வன்முறைகள் தற்போது கொழும்புக்கும் பரவியுள்ளன.

ஆளும் கட்சியின் இளம் எம். பியான நாலந்தாவின் மறைவை அடுத்து, ஐ. தே. கட்சியின் இளம் எம். பியான சரத் கொங்கசேயின் கொழும்பில் உள்ள உல்லாச விடுதி ஒன்று துப்பாக்கிதாரிகளால் தாக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இல்லம் அமைந்துள்ள -

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா-பிரபா பரிமாறிய கடிதங்கள் வெளியாகும்?

கொழும்பு, பெப். 17

1994 ஆம் ஆண்டு முற்பகுதியில் — சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்ற வேளையில் — ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட 43 கடிதங்களினதும் விவரங்கள் மிகவிரைவில் பகிரங்கப்படுத்தப்படக்கூடும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சர்ச்சைக்குரிய கப்பல் கொழும்பை அடைந்தது

கொழும்பு, பெப். 17

முல்லைத்தீவுக் கடற் பகுதியில் விமானப் படையினரின் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு உள்ளான பின்னர் கடற் படையினரால் கைப்பற்றப்பட்டுத் திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சைப்பிரஸ் சப்பல் நேற்று கொழும்புக்கு வந்துசேர்ந்தது.

திருகோணமலையில் வைத்து இக்கப்பலைக் கடற்படையினரும், கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலீஸ் குழுவும் துருவித் துருவி சோதனையிட்டதும் —

சப்பலில் ஆயுதங்களோ, வெடி மருந்துகளோ இருந்ததற்கான எந்தவிதமான சான்றுகளும் கிடைக்காததும் குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்தே இக்கப்பல் கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டது.

புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு இக்கப்பல் வந்திருக்சலாம் என்ற சந்தேகத்திலேயே அதன் மீது விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியிருந்தன.

(உ-3-150)

## நுணாவில் சம்பவத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 17

நேற்று முன்தினம் பிற்பகல் 12 45 மணியளவில் நுணாவில் பகுதியில் வீதித் தடையில் கடமையில் இருந்த படையினர் மீது கிரனேட் வீச புலிகள் முயன்றதாகவும் —

அவர்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர்களில் ஒருவர் உயிரிழந்ததாகவும் —

மற்றையவர் சயனைட் அருந்தி தற்கொலை செய்தார் எனவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் அறிவித்தன.

(உ-3)

## வவுனியாவில் நேற்று அதிகாலையில் தாக்குதல்

கொழும்பு, பெப். 17

வவுனியா மாவட்டம் சாளம்பைக்குளப் பகுதியில் பாதுகாப்புப்படையினரின் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 5.00 மணியளவில் துப்பாக்கிகள் மற்றும் பீரங்கிகள் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் படையினர் தரப்பில் ஒருவர் காயமடைந்தார்.

படையினரின் பதில் தாக்குதலின் பின்னர் அப்பகுதியில் புலிகளின் மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக படைவட்டாரங்கள் அறிவித்தன.

மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை.

(உ-3)

## வவுனியா தடுப்பு முகாம் அகதிகளுக்கு கல்வி வசதி

யாழ்ப்பாணம், பெப். 17

வவுனியாவில் உள்ள தடுப்பு முகாம்களில் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதற்கு தற்காலிக வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தங்கியிருந்து கடந்த சில மாதங்களுக்கு முன் வவுனியா சென்ற ஆயிரக்கணக்கானவர்கள் தடுப்பு முகாமில் தங்கியுள்ளனர்.

இவ்வாறு தங்கியிருப்போரின் பிள்ளைகள் கல்வி பெறமுடியாத நிலையில் இருந்ததையடுத்து, அவர்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயில வவுனியா கல்விப்பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா தற்காலிக ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறீமா கோழிக்குஞ்சு

ஒரு நாள் நிரம்பிய பிறீமா லோமன் இன பேட்டுக் கோழிக்குஞ்சு (சிவப்பு, வெள்ளை) விற்பனைக்குண்டு. மருந்தும் வழங்கப்படும். முகவரி:

**R. S. K. கோழிப்பண்ணை,**
**"முருகபதி" உறவில்,**
**சுன்னாகம். (உடுவில் மான்ஸ் பாடசாலை வீதி)**
(45330)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகேஸ்வரி கயிலாயபதி

திருமதி நாகேஸ்வரி கயிலாயபதி (15-2-97) சனிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், ஓய்வுபெற்ற காணிப்பதிவாளர் குமாரசுவாமி கயிலாயபதியின் அன்பு மனைவியும், அன்பரசி, அன்பழகன், அன்புச்செல்வி ஆகியோரின் அன்புத்தாயாரும் சூரியகுமாரின் மாமியாரும், கபிலன், சுதன், மகிழினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பரநிருபசிங்கம், பாலசிங்கம், கனகம்மா, இலட்சுமிப், பிள்ளையம்மா, சச்சிதானந்தம், அன்னலட்சுமி, விமலாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (16-2-97) ஞாயிற்றுக்கிழமை செம்மணி இந்து மயானத்தில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
கு. கயிலாயபதி
(கணவன்)

19 அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
(45329)

## கந்தசாமி அருண்மொழித்தேவன்

சரசாலை தெற்கைச் சேர்ந்த கந்தசாமி அருண்மொழித்தேவன் (ஆசிரியர், சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம்) வவுனியாவில் 12 - 02 - 1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தசாமி (இளைப்பாறிய கிராமசபை இலிகிதர்), தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், தேவரத்தினத்தின் (ஆசிரியை, சரசாலை சரஸ்வதி வித்தியாசாலை), அன்புக் கணவரும், முகுந்தன் (லண்டன்), பாரதி நுகேகொட, திறந்த பல்கலைக்கழகம்), புரந்தரன், புவனன், துஷ்யந்தி, மிர்ணாளினி (மாணவர்கள், வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயம்), ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானசம்பந்தன் (ஆசிரியர், புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்), சந்திரசேகரம்பிள்ளை (லிகிதர், கல்வித்திணைக்களம், வலயம் 01, அலகு அலுவலகம்), யின் சகோதரனும் சரசலோசனா, தவமணிதேவி, தில்லைநாயகம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், சுப்பிரமணியத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சந்திரசேகரம்பிள்ளை
(சகோதரன்)

சரசாலை வடக்கு,
சரசாலை.
(45331)

## வைரவப்பிள்ளை கந்தப்பிள்ளை

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த வைரவப்பிள்ளை கந்தப்பிள்ளை 13. 02. 1997 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா பூவரசங்குளத்தில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், இராசம்மா (கனடா), பரமேஸ்வரி (ஆசிரியை, புலோலி மெ. மி. த. க. பாடசாலை) கமலாதேவி, ஸ்ரீகாந்தன் (கனடா), வசந்தாதேவி, ஜெயந்தி (கனடா), றாஜி, குகதாசன் (கனடா), ரவீந்திரநாதன் (கனடா), சுதா (ஆசிரியை, ஊரெழு கணேசவித்தியாசாலை), முகுந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சின்னத்துரை (கனடா), செல்லத்துரை (வருமானவரி உத்தியோகத்தர்), குமாரவேலு (தலைமைக்காரியாலாயம், கூட்டுறவு பரிசோதகர்), அற்புதராணி (கனடா), இராசேந்திரம் (கனடா), கனகலிங்கம் (பூவரசங்குளம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனடாவில் வசிக்கும் அருட்குமரன், ஆனந்தகுமரன், செந்தில்குமரன், செல்வக்குமரன், செந்தூர்குமரன், அருட்செல்வி, அம்பிகைக்குமரன், சாரங்கன், சாந்தனா, சாலவன், துஷ்யந்தி, துர்க்கா மற்றும் புருசோத்தமன், பஞ்சகல்யாணி, காயத்திரி, துஷ்யந்தி, லோகப்பிரசன்னா, இராகுலன், காண்டீபன், வைகுந்தன், கரிகாலன் ஆகியோரின் அன்புப் பேரனும், நன்னித்தம்பி, காலஞ்சென்ற மாணிக்கம் இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரனும், நாகமுத்து, பொன்னையா, காலஞ் சென்ற செல்லத்துரை, சின்னத்தங்கச்சி, தம்பிப்பிள்ளை, செல்லரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 13.02.97 அன்று பூவரசங்குளத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
சோ. குமாரவேலு
(மருமகன்)

புன்னாலைக்கட்டுவன்,
சுன்னாகம். (45332)

## நாளை

**மாசி 7**

செவ்வாய்க்கிழமை

திதி: ஏகாதசி
முற்பகல் 9- 23 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பிற்பகல் 1-46 வரை.

வீம ஏகாதசி விரதம்
ராகுகாலம்: 3.32-5.02
சுபநேரம்: 11.02 - 12-32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பயணிகள் கவனத்திற்கு!

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு விமான மூலம் பயணம் செய்ய சிவில்நிர்வாக அலுவலகத்தில் பெயர் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 216 - க்கு உட்பட்டவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் — அடுத்த கப்பல் சேவை எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## மன்னாருக்கு கப்பல்

யாழ்ப்பாணம், பெப். 17

காங்கேசன்துறையில் இருந்து மன்னாருக்கு நாளை மறுதினம் புதன்கிழமை பயணிகள் கப்பல் சேவை ஒன்று இடம் பெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்ய விரும்புவோர் இன்றும், நாளையும் தமது பதிவுகளை யாழ். அரச அதிபரிடம் மேற்கொள்ளலாம் என்றும்—

கப்பலில் பயணம் செய்யும் ஆயத்தங்களுடன் பயணிகளை நாளை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறும் —சிவில்நிர்வாகப் பிரிவு கேட்டுள்ளது. (உ-3)

## யாழ்.,நல்லூர் அதிபர்கள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,பெப். 17

யாழ்ப்பாணம்,நல்லூர் கல்விக்கோட்டங்களின் அதிபர்களுக்கான கூட்டங்கள் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருக்கின்றன.

யாழ்.கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை காலை 10-30 மணிக்கு யாழ் திருக்குடும்பக்கன்னியர்மடம் பாடசாலையிலும்—

நல்லூர் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் காலை 10-30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும்—நடைபெறும்.

(உ-3)

## ஓய்வூதிய வவுச்சர்கள்

நவாலி, பெப். 12

வேலணைப் பிரதேச ஓய்வூதியர்களின் பெப்ரவரி மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளையிலும் கிராமிய வங்கிகளிலும் ஓய்வூதியம் பெறுபவர்களினது ஓய்வூதிய வவுச்சர்கள் அந்தந்த வங்கிகளுக்கும் ஏனைய வவுச்சர்கள் தபாலிலும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(உ-100)

# ஐ.தே.கவின் முக்கிய பதவிகளில் மாற்றம்

கொழும்பு, பெப். 17

ஐ. தே. கட்சியின் முக்கிய தலைமைப் பதவிகளில் மாற்றம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சித் தவிசாளர் பொறுப்பு இதுவரை காலமும் ஒரு முஸ்லிம் பிரமுகரிடமும்—

பொதுச் செயலாளர் பொறுப்பு ஒரு சிங்களப் பிரமுகரிடமும் —

பொருளாளர் பொறுப்பு கணேசலிங்கத்திடமும் இருந்து வந்தன.

இதன் மூலம் மூவின மக்களுக்கும் கட்சியின் உயர் தலைமைப் பதவியில் இடமளிக்கப்பட்டு வந்தது.

ஆனால் அண்மையில் கட்சித் தவிசாளராக கரு ஜெயசூரியா நியமிக்கப்பட்டதுடன் அப்பதவி முஸ்லிம் தரப்பிடமிருந்து பறிபோனது.

கணேசலிங்கம் தற்போது பொருளாளர் பதவியிலிருந்தும் கட்சியிலிருந்தும் விலகியுள்ளார். அவரது இடத்துக்குப் புதிய பொருளாளராக சிங்களவர் ஒருவரே நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் மூன்று முக்கிய பொறுப்புக்களும் சிங்களவர் வசம் போகும் நிலையே உள்ளது.

இந்நிலையில் கட்சித் தவிசாளர் கரு ஜெயசூரியா எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கட்சியின் சார்பில் கொழும்பு மாநகரசபையின் மேயர் பதவிக்கு நிறுத்தப்பட்டுள்ளார்.

அதனால் —

கட்சித் தவிசாளர் பதவியிலிருந்து அவர் விலகக் கூடும் என்றும் —

அவரது இடத்துக்கு முன்னாள் அமைச்சரும் கட்சியின் மூத்த பிரமுகர்களுள் ஒருவருமான ஏ.ஸி.எஸ். ஹமீத் நியமிக்கப்படக் கூடும் என்றும்—

கொழும்பில் பேச்சடிபடுகின்றது. (உ150)

# பௌஸிக்கு எதிராக விரைவில் நடவடிக்கை?

கொழும்பு, பெப். 17

மெக்கா சென்றுள்ள சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி நாடு திரும்பியதும் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட விருப்பதாக அரச வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே லீடர்' தகவல் வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் தமது உறவினர்களை அல்லது தமக்கு நெருக்கமானவர்களை தற்போது நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட வைக்கக்கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்டிப்பான உத்தரவு ஒன்றை விடுத்திருந்தார்.

ஆனால் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவுடன் போட்டியிடும் — கே. கணேசலிங்கம் தலைமையிலான — சுயேச்சைக் குழுவில் தமது மகனான நைவ்வர் பௌஸியை அமைச்சர் பௌஸி நிறுத்தியிருக்கின்றார். இதற்காகவே அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## கோழி விலை வீழ்ச்சி!

சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் ஊர்க் கோழிகளின் விலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

புறோய்லர் இறைச்சிக் கோழிகள் சந்தைக்கு விற்பனைக்கு வந்துள்ளதை அடுத்தே இந்த விலைவீழ்ச்சி.

# கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை மக்கள் வங்கியைச் சேர்ந்த

## திரு. V.T. பத்மநாதன்

**(பிரதி முகாமையாளர்)**

அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்.**

**மக்கள் வங்கி,**
**பருத்தித்துறை.**
(45336)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை மூத்ததம்பி

சாயுடை, மாவிட்டபுரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மூத்ததம்பி நேற்று (16-02-97) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், வேலுப்பிள்ளை, சின்னராசா, திருமதி சின்னமணி வேற்கரன், திருமதி அம்பிகாபதி இராமச்சந்திரன் (ஆசிரியை, அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி), பாலசுந்தரம், செல்வி அன்னபூரணம் (ஆசிரியை, நாகேஸ்வரி வித்தியாலயம், சுன்னாகம்), காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் வைத்திலிங்கம் (3 ஆம் வருட கலைப்பீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-2-97) முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்.
பிள்ளைகள்

தற்போதைய முகவரி!
அன்னை இல்லம்,
நந்தாவில் ஒழுங்கை,
கொக்குவில்.
(45337)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியங்கா - வதேரா திருமணம் நாளை

## பலத்த பாதுகாப்புடன் நடக்கிறது

புதுடில்லி, பெப். 17

இந்தியாவில் பிரப்லமானதும் உலகளாவிய கவனத்தைப் பெற்றுள்ளதுமான திருமணச் சடங்கு நாளை நடைபெறுகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் பேர்த்தியும், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் மகளுமான பிரியங்கா காந்தி ராபர்ட் வதேரா என்ற பிரபல தொழிலதிபரை நாளை கரம்பற்றுகிறார்.

திருமணத்துக்கான ஏற்பாடுகள் முடிவடைந்துள்ளன.

திருமணச் சடங்கின் போது பிரியங்கா இளஞ்சிவப்பு நிறக் கதர் சேலையையே அணிவார் எனத் தெரியவருகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் திருமணத்துக்கு ஜவகர்லால் நேரு வாங்கிக் கொடுத்த சேலை இதுவாகும். பின்பு மேனகா காந்தி, சோனியா ஆகியோரும் தங்கள் திருமணத்தன்று இந்தச் சேலையையே அணிந்தனர்.

பிரியங்காவின் திருமண அழைப்பிதழ்களை முக்கிய பிரமுகர்களுக்கு சோனியாவே நேரில் சென்று வழங்கினார்.

இந்திய ஜனாதிபதி, பிரதம மந்திரி, சிரேஷ்ட தலைவர்கள் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் நாளைய திருமண வைபவத்தில் கலந்து கொள்கின்றனர்.

திருமண ஏற்பாடுகள் ஒருபுறம் நடக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதில் அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

திருமணத்தின் பின் பிரியங்காவும் அவரது கணவரும் தங்கவுள்ள வீட்டுக்கு கறுப்புப் பூனைப் படையினர் பாதுகாப்பு வழங்குவர். (ஐ)

# “போபர்ஸ்”பீரங்கி ஊழல் சூத்திரதாரியான கொத்ரோச்சியை கைது செய்ய புதுடில்லி நீதிமன்றம் உத்தரவு!

புதுடில்லி, பெப். 17

சர்ச்சைக்குரிய ‘‘போபர்ஸ்’ பீரங்கி ஊழலில் பணம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரபல தொழிலதிபர் கொத்ரோச்சியை கைது செய்யுமாறு புதுடில்லியில் நீதிமன்ற உத்தரவு பிறப்பித்துள்ளது

கொத்ரோச்சி தற்போது மலேசியாவில் தங்கியுள்ளார்.

நீதிமன்றத்தின் கைது உத்தரவு ஆவணங்களை எடுத்துக் கொண்டு இந்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் மலேசியாவுக்குச் சென்றுள்ளனர்.

மலேசியாவில் உள்ள இன்ரபோல் அதிகாரிகளிடம் இந்த ஆவணங்கள் கையளிக்கப்படவுள்ளன.

பீரங்கிப் பேர ஊழலில் ஆயிரத்து 400 கோடி ரூபாவை கமிசனாகப் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் ஐவரில் திரு. கொத்ரோச்சி முக்கியமானவராவார். ஆயினும் தம் மீதான குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார்.

இவர் விசாரிக்கப்பட்டால் இந்த ஊழல் தொடர்பான பல புதிய தகவல்கள் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# திரிபுராவில் தொடர்ந்து கலவரம்! 100 க்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரை!!

புதுடில்லி, பெப். 17

திரிபுராவில் தொடர்ந்து இடம்பெற்று வரும் வன்செயல்களை அடுத்து இந்திய இராணுவம் அங்கு சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது.

கடைசியாக நடந்த வன்செயல்களில் 13 பேர் பலியாகியுள்ளனர். 9 பேர் காயமடைந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

திரிபுராவின் பாரம்பரிய குடிமக்களுக்கும், பங்களா தேஷில் இருந்து வந்து குடியேறிய மக்களுக்கும் இடையேயான இன மோதல் கடந்த சில வாரங்களாக தீவிரமடைந்துள்ளன. (ஐ)

# குடும்ப உறவுகள் சிதைவடையும் அவலம்!

## இத்தாலியில் அதிகரிப்பு

ரோம், பெப். 17

இத்தாலியில் பாரம்பரிய ரீதியாகக் கட்டி வளர்க்கப்பட்டு வரும் குடும்ப உறவுகள் தற்போது சிதறி சின்னாபின்னமாகி வருவதாக கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

திருமணம் செய்யாமல் இருப்போர், திருமணமாகி பிரிந்து வாழ்வோர் நாட்டில் 48 சதவீதமானவர்களாக உள்ளனர்.

சுமார் 44 சதவீதமான குடும்பங்களில் ஒரு குழந்தை மட்டுமே உள்ளது.

அங்கு தனியாக வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குழந்தைகள் மீதான தாய்மாரின் பராமரிப்பும் குறைந்து வருகிறது.

இந்த விவரங்கள் அந்தக் கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளன.

கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப் பீடம் அமைந்துள்ள இத்தாலி நாட்டில் குடும்ப உறவுகள் ஏன் இவ்வாறு சிதைந்து வருகின்றன என்ற கேள்வியை இக் கருத்துக் கணிப்பு எழுப்பியுள்ளது. (ஐ 10)

# உலக அரங்கில்

ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த இடங்களிலேயே இந்த வன்முறைகள் இடம் பெற்றிருக்கின்றன.

துணை இராணுவப் படைகள் இப்பகுதிகளில் தீவிர ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

## ஆர்ப்பாட்டம்

மதசார்பின்மையை ஆதரிக்கும் ஆயிரக்கணக்கான பெண்கள் துருக்கியில் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

‘‘ஷரித்’’ சட்டம் அமுல் செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையை எதிர்த்தே ஆர்ப்பாட்டம் செய்தனர் (ஐ)

# கிழக்கு ஐரோப்பாவில் இருந்து அஸாம் தீவிரவாதிகளுக்கு பெருந்தொகை ஆயுதங்கள்

## இந்தியப் படைகள் உஷார் நிலை

அஸாம் மாநிலத்தின் முக்கிய தீவிரவாதக் குழுவான— தடை செய்யப்பட்ட— அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு (உல்பா) கிழக்கு ஐரோப்பாவில் இருந்து பெருமளவு ஆயுதங்கள் விரைவில் கிடைக்கவிருப்பதாக இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள் இத்தகவலை வெளியிட்டிருப்பதாகவும் —

பெருந்தொகையான ஆயுதங்கள் கள்ளச் சந்தையில் வாங்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிடைக்கவிருக்கும் ஆயுதங்களில் பெருந்தொகையான ஏ. கே 47 ரக துப்பாக்கிகள், ரி. 56 துப்பாக்கிகள், எறிகணை செலுத்திகளும், தாங்கி எதிர்ப்பு ஆயுதங்களும் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுதங்களை அஸாம் தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் கொண்டுவர எந்தப் பாதையைப் பயன்படுத்துவர் என்பது குறித்து நிச்சயமாகத் தெரியவில்லை என்று அதிகாரிகள் கூறினர்.

வடகிழக்கு இந்திய மாநிலங்களின் பிரிவினை வாதிகளுக்கு உதவப் போவதில்லை என்பதில் பங்களாதேஷ் அரசு உறுதியாக இருக்கிறது, எனவே தீவிரவாதிகள் முன்பு பயன்படுத்திய பங்களாதேஷ் ஊடான பாதையை இனிமேல் பயன்படுத்த வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

1995 ஆம் ஆண்டு பர்மாவும், பங்களாதேஷும் சந்திக்கும் எல்லையோரம் இருந்து மீசோராமுக்கு ஊடுருவ எத்தனித்த அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணித் தீவிரவாதிகளை இந்தியப்படை வழிமறித்து தாக்கியது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மத்தியஸ்தம் வகிப்பதற்கு பிரிட்டன் விருப்பம் ஆனால் இரு தரப்பிலிருந்தும் பதில் இல்லை!

## சில சந்தேகங்களை எழுப்புகிறது ‘ஈழநாதம்’ பத்திரிகை

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்ய பிரிட்டன் தொடர்ந்தும் தயாராக இருக்கின்றது என பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர் கூறியிருக்கின்றார்.

பிரிட்டனின் இந்த நிலைப்பாட்டை புலிகள் வரவேற்றனர். அதேவேளை பிரிட்டனின் நிலைப்பாடு குறித்து அவர்கள் சந்தேகமும் தெரிவித்துள்ளனர்.

‘‘மத்தியஸ்தம் தொடர்பான எமது கொள்கையில் எதுவித மாற்றமும் இல்லை. எனினும் எமது இலங்கை விஜயத்தின் போது மத்தியஸ்தம் குறித்து நான் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. எந்தவித அரசியல் செய்தியையும் நான் கொண்டுவரவுமில்லை.’’ — இவ்வாறு கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் பிரிட்டிஷ் பொதுநலவாய நாடுகளின் அலுவலகப் பிரதி அமைச்சர் டாக்டர் லியம் பொக்ஸ் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரின் இல்லத்தில் இந்தப் பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது.

‘‘இருதரப்புக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்கத் தயாராக இருப்பதாக எமது நாடு பல தடவைகள் தெரிவித்தது. ஆனால் இருதரப்பினரும் எந்தவிதமான சாதகமான பதிலையும் அளிக்கவில்லை. சாதகமான பதில் கிடைக்காத காரணத்தினால் மத்தியஸ்தம் தொடர்பான விடயத்தை நாம் கைவிட்டுவிடவுமில்லை.’’ என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் —

பிரிட்டனின் இந்த நிலைப்பாடு குறித்து வன்னியில் இருந்து விடுதலைப் புலிகளால் வெளியிடப்படும் ‘‘ஈழநாதம்’’ தினசரி தனது ஆசிரிய தலையங்கத்தில் சில சந்தேகங்களை வெளியிட்டது. அவை வருமாறு:-

‘இரு தரப்பினரும் கேட்டுக் கொண்டால் இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்கலாம் என்று பிரிட்டன் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. இனப்பிரச்சினைத் தீர்வில் புலிகளின் பங்கினை பிரிட்டன் ஏற்றுக்கொண்டுள்ளதின் வெளிப்பாடு இது என்று கொள்ளலாம்.

இந்நிலையினை பிரிட்டன் உணர்ந்திருப்பினும்கூட அதன் ஒருசில நடவடிக்கைகள் கேள்விக்குரியதாகவும் உள்ளன. அதாவது சிறிலங்காவுக்கு ஒரு வகையில் தேவையான உதவிகளை வழங்கிக் கொண்டு, மறுபுறம் அதன் நடவடிக்கைகளை விமர்சனம் செய்வதுபோலவும் அமைந்துள்ளது. இது பிரிட்டனின் நோக்கம் குறித்து சந்தேகத்தை விளைவிப்பதாக உள்ளது.

பிரிட்டன் சிறிலங்காவுக்கு நிதி உதவிகளை வழங்கி வருகிறது. இதில் சிறிலங்கா அரசு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பதில் இராணுவத் தீர்வை நாட ஆதாரமாகவுள்ளது.

இந்த நிலைப்பாடானது பிரிட்டன் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பதற்கு இடையூறாக உள்ளது. மாறாக சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது. ஏனெனில் பிரிட்டன் கூறுவதைப்போல, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் வழி எனில், சிறிலங்கா அரசு இராணுவத் தீர்வை தீவிரமாக நாடி நிற்கின்றபோதும், பிரிட்டன் ஏன் சிறிலங்காவுக்கு பொருளாதார உதவிகளை முனைப்புடன் செய்ய வேண்டும்?

தனது நிலைப்பாட்டிற்கு ஏற்ப அரசியல் தீர்வொன்றைக் காணுமாறு பிரிட்டன் ஏன் சந்திரிகா அரசை நிர்ப்பந்திக்கக் கூடாது? — என்று கேள்வி எழுப்பியுள்ளது ஈழநாதம்.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த யாழ். மாணவருக்கு வவுனியாவில் ஆறு பாடசாலைகள்!

## மாலை வேளையில் கல்விபோதனை

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது வவுனியாவில் தங்கியுள்ள 15 ஆயிரம் மாணவர்களும் கல்விபயில வவுனியாவில் 6 பாடசாலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள யாழ். மாவட்ட ஆசிரியர்கள் 524 பேர் இந்தப் பாடசாலைகளில் பணியாற்றுகிறார்கள். ரம்பைக்குளம் ம. வி, வவுனியா மத்தி தமிழ்க் கலவன் பாடசாலை, விபுலானந்த ம. வி, நெலுக்குளம் ம. வி, பூந்தோட்டம் ம. வி, வெளிக்குளம் ம. வி. ஆகியவற்றில் மாலை நேரப் பாடசாலையாக இந்த இடம்பெயர்ந்தவர்களின் பாடசாலைகள் இயங்குகின்றன.

அந்த பாடசாலைகளுக்குத் தேவையான சகல வசதியையும் வவுனியா கல்விப் பணிப்பாளர் திரு. துரை தியாகராஜா வழங்கியுள்ளார். (ஐ-3)


## தேவை

தமிழ், ஆங்கில தட்டெழுத்து வேலையில் (Type Writting) அனுபவமுள்ளவர்கள் தேவை. அலுவலக நாள்களில் காலை 9 மணிமுதல் 12 மணிவரை தராதரப்பத்திரங்களுடன் சமுகமளிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி)
உதயன் பணிமனை,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## அரசாங்க அறிவித்தல்

### அரசினர் பொது வைத்தியசாலை யாழ்ப்பாணம்

### 1997ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் திருத்துநர்களையும் பதிவு செய்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் வழங்கக்கூடியவர்களிடம் இருந்து பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01) காகிதாதிகள் எழுது பொருள்கள்.
02) பாவனைப் பொருள்கள் (ஈர்க்கில் தடி, தும்புத் தடி, சவர்க்காரம், தீப்பெட்டி, விம், ஹார்ப்பிக் முதலியன)
03) வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள் சீருடைத் துணிகள், யன்னல் சீலைகள், படுக்கை விரிப்பு, கோடிட்ட துணி, துவாய், றெக்சின், சப்பாத்து முதலியன)
04) மரத்தளபாடங்கள்.
05) உருக்குத் தளபாடங்கள், உருக்குத் தளபாடத் திருத்த வேலைகள்.
06) பிளாஸ்டிக் பொருள்கள் (வாளி, குப்பைக் கூடை, குப்பைவாளி முதலியன)
07) இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருள்கள் (ஆமைப்பூட்டுக்கள், வாளி வகைகள், குப்பை வாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியன)
08) மின்சார உபகரணங்கள் உதிரிப்பாகங்கள் விநியோகம், மின்சார இயந்திர திருத்த வேலைகள்.
09) வைத்தியசாலை உபகரணங்கள் (கட்டில்கள், சேலைன் ஸ்ராண்ட், சத்திர சிகிச்சை உபகரண நிலைகள்)
10) கட்டட திருத்தத்துக்கு அவசியமான பொருள்கள்.
11) (டயர் ரியூப் உட்பட) மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், வாகனத்திருத்தம்.
12) தட்டச்சு இயந்திரம், றோனியோ இயந்திரம், நிழல் பிரதி எடுக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள், திருத்த வேலைகள.
13) நீர் வழங்கு பொருள்கள் (பி. வி. சி. குழாய்கள் முதலியன)
14) படிவங்கள் முதலியன அச்சடித்து வழங்குதல்.

மேற்படி வழங்குநர்களாகவும், திருத்துநர்களாகவும் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தை எனது பணிமனையில் ரூபா 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 28-02-97 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிககு முன்னர் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1) எமது 29-01-97 விளம்பரத்தின்படி (31-1-97 ''உதயன்'') ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.
2) கீழ்க்காணும் நிறுவனங்களும் மேற்படி சேவைகளில் ஈடுபட விரும்பினால் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம்.
   1) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்.
   2) கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள்.
   3) கிராம அபிவிருத்திச் சங்கங்கள்.
   4) பாடசாலை அபிவிருத்திச் சபைகள்.
   5) ''சமுர்த்தி'' நிர்வாகிகள்.

வைத்திய கலாநிதி
**செல்வி என். கனகரத்தினம்**
பணிப்பாளர்
அரசினர் பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்,
15-02 97. (சி-143)

## அதிபர்கள் கூட்டம்

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (ஐ-15)

## பாவனையாளர் பாதுகாப்பு சங்கம்

வலி தென்மேற்கு பிரதேச சபைபிரிவு பாவனையாளர் பாதுகாப்புச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

கடந்த 10 ஆம் திகதி மானிப்பாயிலுள்ள வலி. தென்மேற்கு பிரதேசசபை பணிமனையில் சண்டிலிப்பாய் (வலி. தென்மேற்கு) பிரதேச செயலர் திரு.நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (ஐ-135)

## மானிப்பாய் வர்த்தகருக்கு கூட்டம்

மானிப்பாய் பரிஷ் பிரிவிலுள்ள வர்த்தகர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 19-ம் திகதி புதன் கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் பரிஷ் பிரிவு வர்த்தகர் சங்கம் இசகூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஐ-135)

## சிறுவர் இல்லம் ஆரம்பம்

நவாலி, பெப். 17

வலிகாமத்தில் இடம் பெற்ற சம்பவங்களையடுத்து கடந்த வருடம் மூடப்பட்ட நவாலி மகேஸ்வர சிறுவர் இல்லம் கடந்த மாதம் முதல் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது. (ஐ-100)

## படிவங்கள் வந்தன

பளைப் பிரதேச குடியிருப்பாளர்களுக்கு மீளக் குடியமர்வு நிவாரணமான 5ஆயிரம் ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகத்துக்கு வந்துள்ளன.

1 2பக்கங்களைக் கொண்ட இவ் விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினரால் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நேரடியாகச் சென்று வீடு வீடாகவிநியோகிக்கப்பட்டு பதிவு செய்யப்பட வுள்ளன. (ஐ117)

## ஐ. தே. கட்சி உறுப்பினர் ராஜினாமா

நுவரேலியா மாநகர சபை மேயராய்ப் பதவி வகித்த நளின் ஹெரத் ஐ.தே.கட்சியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அவர் சுயேச்சைக் குழுவில் போட்டியிட வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளார். (ஐ-10)

# உயர்தர மாணவர்களை பலிக்கடாக்கள் ஆக்குவதா?

கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமான தொடர்புகள் ஆரோக்கியமான நிலைமைகளில் இல்லை என்பதை எவராலும் மறுக்கமுடியாதுதான். இருந்தாலும் அரசாங்கத் திணைக்களங்கள் மட்டத்திலும் இந்நிலை இருப்பதனால் அப்பாவித் தமிழ் மாணவர்கள் பலியாகிக்கொண்டிருப்பது தாங்கொணா வேதனையைத் தருகின்றது.

ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கு வணிகப்புள்ளியியல் என்னும் பாடத்தை 1997ஆம் ஆண்டில் வர்த்தகப் பிரிவில் அறிமுகப்படுத்தப்படுவதாக திணைக்களம் அறிவித்திருந்தது. அதற்கான பாடத் திட்டத்தையும் அனுப்பியிருந்தது. ஆனால் கட்டாயபாடமாகவோ, அல்லது தெரிவுக்குரிய பாடமாவோ என்று தெரியாத நிலையில் யாழ்ப்பாணத்தில் கட்டாய பாடம் என்ற தோரணையில் கற்பிக்கத்தொடங்கிவிட்டனர்— எந்தவிதமான அறிவுறுத்தல்களும் இல்லாமல்.

எந்தவிதமான கருத்தரங்குகளும் இல்லாமல் எழுந்தமானமாக பாடத்திட்டத்தை மட்டும் உதவியாகக் கொண்டு ஒரு மயக்கமான சூழ்நிலையிலேயே ஆசிரியர்கள் கற்பிக்கத் தொடங்கினார்கள். புதிய புதிய ''ரியூசன்'' ஆசிரியர்களும் உருவானார்கள். கொழும்பில் நடந்த கருத்தரங்குகளுக்கேனும் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் செல்வதற்கு ஒழுங்கு செய்யப்படவில்லை. இடப்பெயர்வு காரணமாகக் காட்டப்பட்டது.

தற்பொழுது ஒரு தகவல் வருகிறது. இப்பாடம் தெரிவுக்குரிய பாடமாம். யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்திற்கு இது தெரியுமோ தெரியாதோ மாணவர்களுக்குக் குழப்பநிலை. மாணவர்கள் விரும்பிப்படிக்குமாறு தூண்டவும் என்று ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தி வருகிறார்கள். தெரிவுக்குரியபாடம் என்று தெரிந்திருந்தால் போட்டிப்பரீட்சையாக எல்லோராலும் கருதப்படுகின்ற உயர்தரப் பரீட்சைக்கு, எந்தவிதமான வசதிகள் அற்ற நிலையில் யாழ் மாணவர்களை பலிக்கடாக்களாக்கி அனுப்புகின்ற நிலைமையை தவிர்த்திருக்கலாம். அடுத்தடுத்த வருடங்களில் வினாத்தாள்களைப் பார்த்து ஆசிரியர்களை சிறந்த முறையில் தயார்ப்படுத்தி இப்பாடத்தினை யாழ். மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கலாம்.

### வாசகர் திருமுகம்

வெறுமனே சுற்று நிருபங்களை மட்டும் வைத்துக் கொண்டு சேவை செய்யும் அதிகாரிகள் தங்களின் உன்னதமான பொறுப்புகளை முறையாக உணர்ந்து கொள்ளத் தவறுவதனால் எதிர்கால சமுதாயத்திற்கு எத்தனை பெரிய துரோகங்களைச் செய்கின்றார்கள் என்பதை நினைக்கையில் தமிழ் உள்ளங்கள் வேதனைப்படுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

கல்வி அதிகாரிகளுக்கு ஆசிரியர்களிடம் அதிகாரம் பண்ணத் தெரிந்திருப்பதுடன் மட்டுமல்லாது தங்கள் மேலதிகாரிகளிடம் நியாயத்திற்காகப் போராடி வெல்வதற்குரிய துணிவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

இறுதித் தவணையான 1997 ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயாவது தொடர்ச்சியான, முறையான, கருத்தரங்குகளை நடத்தி, திணைக்களத்தில் இருந்து மாதிரி வினாப் பத்திரங்களைப் பெற்று ஆசிரியர்களை சிறந்த முறையில் தயார்படுத்தி மாணவர்கள் ஓரளவேனும் பயமில்லாது பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஆவன செய்வார்களா?

அழகன்.

நெல்லியடி.

# பனை வடலிகளுக்கு ஆபத்து; உடன் நடவடிக்கை தேவை

கடந்த வருடங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல இடங்களிலும் பனம் விதைகள் நடப்பட்டன. அந்த வகையில் கல்லுண்டாய் வீதியிலும் 1995 ஆம் ஆண்டில் பனம் விதைகள் கிட்டத்தட்ட ஆறு கிலோமீற்றர் நீளத்திற்கு வீதியின் இரு மருங்கிலும் ஏறக்குறைய பத்தடிக்கு ஒரு விதையாக நடப்பட்ட அந்த விதைகள் இன்று ஓரடி குருத்து ஓலையுடன் வளர்ந்திருக்கின்றன.

இவற்றில் சிலவற்றை கால்நடைகள் கடித்திருப்பதைக் கவனிக்கக் கூடியதாகவுள்ளது. சென்ற சில மாதங்களாக கல்லுண்டாய் வெளிக் காணிகளில் நெற்பயிர்கள் இருந்தபடியால் கால்நடைகள் வருவது தடைப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது நெல் அறுவடை தொடங்கியுள்ளதால், இன்னும் சில நாள்களில் கால்நடைகள் கல்லுண்டாய் வெளித் தரவைக்கு மேய்ச்சலுக்குச் செல்லும். அப்போது இச் சிறு பனை வடலிகளுககு அபாயமுண்டு.

இதைத் தவிர்ப்பதற்கு பாதுகாப்புக் கூடுகள் அமைப்பது சிரமமானது; அதிக செலவும் உண்டாகும். ஆகையால் அவற்றுக்கு வேப்பெண்ணெய் அல்லது இலுப்பெண்ணெய் தெளிப்பது அவற்றைப் பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையாகும். நெல் அறுவடை தொடங்கி விட்டதால் இது விடயத்தில் விரைவில் செயற்பட வேண்டிய அவசியமுண்டு. உயரமான வடலியாக வளரும் வரையும் வருடாந்தம் இச்செயற்பாடு வேண்டியுள்ளது.

பனை அபிவிருத்திச் சபை அதிகாரிகள் இதில் கவனம் எடுத்து உடன் நடவடிக்கையில் இறங்க வேண்டும். செய்வார்களா?

நா. குகராசா

அராலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அபிவிருத்தி இணைப்பு குழு தலைவராக டக்ளஸ் தேவானந்தா

## ஜனாதிபதி அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் இணைப்புக் குழுவுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தலைவராகப் பணியாற்றுவார்.

இது தொடர்பான ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அறிவித்தல் யாழ். செயலகத்துக்குக் கிடைத்துள்ளது.

அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் இந்தக்குழு விரைவில் யாழ்ப்பாணத்தில் கூடவுள்ளது.

இக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கான திட்டங்களை இனங்கண்டு தயாரிப்பதற்காக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களங்களின் தலைவர்களும் நாளை செயலகத்தில் கூடவுள்ளனர்.

இக் கூட்டத்தில் தயாரிக்கப்படவுள்ள திட்டங்கள் திரு. டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான இணைப்புக் குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். (ஐ-3)

# 'பெரும்குடிமக்கள்' என்ற பெருமை இலங்கைக்கு!

## சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு. பெப். 16

உலகிலேயே கூடுதலாக குடிப்பழக்கத்தை கொண்டுள்ளவர்களின் பெரும்குடிமக்களின்நாடாக இலங்கைதிகழ்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிலையை மாற்றுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை கிடைத்துள்ளது. விரைவில் அக்குழுவின் பரிந்துரைகள் அமுல் செய்யப்படவுள்ளன.

1997 ஆம் ஆண்டிற்கு முன்பு மூன்று கிராமங்களுக்கு ஒரு சசிப்பு விற்பனை நிலையம் இருந்தது. ஆனால் அது தற்போது 10, 15 ஆக அதிகரித்துள்ளது.

இப்படி ஜனாதிபதி மேலும் கூறினார். (ஐ-3)

# களைகளுக்குள் மூலிகையுமுண்டு; அழிப்பதில் அவதானம் வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், பெப். 17

''களைகள் அழிக்கப்பட வேண்டியவை தான். ஆனால் களைகளுக்குள் பயன் தருமூலிகைகளும் மறைந்திருக்கும். எனவே அவற்றை அழிப்பதில் அவதானம் அவசியம்''

— இவ்வாறு தெரிவித்தார் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை தாவரவியல் ஆசிரியர் திரு. வி. எஸ். குணசீலன்.

இர. சந்திரசேகரசர்மா எழுதிய ''களைகள்'' நூல் வெளியீட்டு விழா அண்மையில் பருத்தித்துறை தேசிய வங்கிக்கட்டடத்தில் நடைபெற்றது. அதில் வெளியீட்டுரை நிகழ்த்தியபோதே திரு. குணசீலன் இவ்வாறு கூறினார்.

றோட்டறிக்கழக ஆதரவில் நடந்த அந்த வெளியீட்டு விழாவுக்கு றோட்டேரியன் ஜே. பஸ்ரியன் தலைமை வகித்தார்.

பிரதமவிருந்தினராக கோட்டக்கல்விப் பிரதிப் பணிப்பாளர் திரு. ரி. செல்வரத்தினம் கலந்து கொண்டார்.

''இதுபோன்ற பல அரிய நூல்கள் ஆசிரிய சமூகத்திடமிருந்து இன்னமும் வெளிவர வேண்டும்'' என்று பிரதம விருந்தினர் தனது உரையில் குறிப்பிட்டார். (ஐ-15)

## பாடசாலைகளில் விளையாட்டு போட்டிகள்

யாழ். மாவட்ட பாடசாலைகளில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற உள்ளன.

முதலாம் பருவம் முடிவதற்கு முன்னர் குறித்தொதுக்கப்பட்ட காலப் பகுதியில் பாடசாலைமட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற வேண்டும் என கல்வித் திணைக்களம் அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ஐ-11)

# மாவடிவேம்பு - வெற்றிலைக்கேணி தாக்குதல்

# புலிகள் பரீட்சித்துப் பார்த்த புதிய யுக்தி!

## தங்கள் இராணுவ பலத்தின் விரிவைக் காட்டும் முயற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாவடி வேம்பு இராணுவ முகாம் மீது 02-02-97 அதிகாலை புலிகளின் கெரில்லாக்கள் தாக்குதல் நடத்தினார்கள்.

அதே நேரம் வடக்கில் வெற்றிலைக்கேணி முகாம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

வெற்றிலைக்கேணி முகாம் மீது நடத்தப்பட்டது பாரிய தாக்குதல் அல்ல; அடையாளத் தாக்குதல் மட்டும் தான்.

வெற்றிலைக்கேணி முகாமின் முன்னரங்க காவல் அரண்கள் ஆறு ரொக்கட் லோஞ்சர்களால் தாக்கியழிக்கப்பட்டன. அங்கிருந்த ஆயுதங்களும், புலிகளின் கெரில்லாக்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

மட்டக்களப்பு மாவடி வேம்பில் நடைபெற்றதுதான் பாரிய தாக்குதல்.

அதிகாலை 12.10 மணியளவில் முகாம் புலிகளின் கெரில்லாக்களால் சுற்றி வளைக்கப்பட்டது.

இருநூறுக்கு மேற்பட்ட புலிகள் களத்தில் இறக்கப்பட்டனர்.

கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் மோதல் நடைபெற்றுள்ளது. படையினரும் திருப்பித் தாக்கியுள்ளனர்.

மாவடி வேம்பு முகாமுக்கு அருகில் கொம்மாதுறை, மற்றும் சித்தாண்டி இராணுவ முகாம்கள் இருந்தமையால், அங்கிருந்து உதவிக்கு வரும் படையினரை எதிர்த்தும் புலிகள் போரிட வேண்டியிருந்தது.

உதவிக்கு விரைந்த படையினரின் கைகள் மேலோங்கும் கட்டத்தில் புலிகள் தாக்குதலை நிறுத்திவிட்டு திரும்பி விட்டனர்.

மாவடிவேம்பு முகாமின் முன்பக்க காவலரண் தீயிடப்பட்டுள்ளது. முகாமுக்குள் இருந்த ஆயுதங்களும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. எனினும் கனரக ஆயுதங்கள் எதுவும் முகாமில் இருக்கவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் புளுக்குனாவ முகாம் தாக்குதலுடன் ஒப்பிடும் போது மாவடிவேம்பு முகாம் தாக்குதல் சிறியதுதான். புலிகளுக்கு மாவடிவேம்பில் இழப்பும் அதிகம். 15 புலிகள் பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட புலிகளின் விசேஷ தளபதி கருணா தலையில்தான் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

தாக்குதல் அணிகள் சமீபத்தில்தான் வன்னியில் இருந்து கடல்வழியாக மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்தன.

கடந்தவாரம் மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புதிய கெரில்லா அணிகளின் நடமாட்டம் அதிகமாக இருந்தது.

பரந்தன் தாக்குதலுக்காக மட்டக்களப்பில் இருந்து வன்னி சென்ற அணிகள்தான் மீண்டும் திரும்பி வந்திருக்கின்றன என்று புலிகளின் பிரமுகர்கள் சிலர் தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறியிருந்தனர்.

### பரீட்சார்த்த தாக்குதல்

எனினும் புதிய அணிகள் சிலவும் மேலதிகமாக மட்டக்களப்பில் வந்து இறங்கியுள்ளதாக நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

மாவடிவேம்பு முகாம் மீதான தாக்குதல் ஒரு பரீட்சார்த்த முயற்சிதான் என்றும் தெரிகிறது.

கிழக்கில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு புலிகளின் அணிகள் குறிவைத்துள்ளன என்று நம்பலாம்.

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துக் கொண்டிருக்கும் போது, புலிகளின் தாக்குதல்களும் வடக்கு - கிழக்கில் சூடுபிடிக்கத் தொடங்கும் என்பதற்கு மாவடிவேம்பு, வெற்றிலைக் கேணி தாக்குதல்கள் ஒரு முன்னோட்டம் மாதிரி நடந்துள்ளன.

மாவடிவேம்பு - வெற்றிலைக்கேணி தாக்குதல்கள் படைத்தரப்புக்கு புதிய அச்சுறுத்தல் ஒன்றையும் விடுத்துள்ளன.

வடக்கிலும் - கிழக்கிலும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தும் உத்தியை புலிகள் முதன் முதலில் பரீட்சித்துப் பார்த்துள்ளனர்.

இதற்கு முன்னர் வடக்கிலும் கிழக்கிலும் ஒரே நேரத்தில் இரண்டு முகாம்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டதில்லை.

வடக்கிலும் - கிழக்கிலும் ஒரே நேரத்தில் தாக்குதல் தொடுப்பது மூலம் தமது இராணுவ பலம் பரவலாக விரிந்துள்ளது என்று காட்டுவதுதான் பிரபாகரனின் நோக்கம்.

ஒரே நேரத்தில் இரண்டு முகாம்கள் தாக்கப்பட்ட செய்தி தெற்கிலும் பரபரப்பாக பேசப்படும் என்பதும் பிரபாகரன் எதிர்பார்த்தது தான்.

வழக்கம்போல ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் தான்.

தென்னிலங்கையில் அரசின் யுத்த வெற்றி முழக்கத்துக்கும் அடி. புலிகளின் பலம் வளர்ந்து வருவதை வெளியுலகம் முன்பாகவும் காட்டியாகிவிட்டது.

ஒரே நேரத்தில் வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் தாக்குதல் நடத்தியிருப்பதால், புலிகளின் அடுத்த குறி வடக்கிலா, கிழக்கிலா என்று தெரியாமல் படை வட்டாரங்கள் சற்றே குழம்பிப்போயுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசாரத் தந்திரமாக வன்னியில் படை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படலாம் என்று புலிகளும் எதிர்பார்க்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு போர்க்களத்தின் தற்போதையநிலைவரப்படி பிரதான தளமான வன்னியை பாதுகாப்பதுதான் புலிகளின் பிரதான நோக்கமாக இருக்கிறது.

தமது பிரதான தளப்பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த புலிகள் மேற்கொள்ளும் உத்திகள் வடக்கு -கிழக்கு போர்முனையெங்கும் பரவலாக நீளும்.

வன்னியில் படை நகர்வை மேற்கொள்ளக்கூடிய முகாம்களின் பாதுகாப்பை அச்சுறுத்தும் தாக்குதல்கள் வன்னியில் தொடரும்.

குறிப்பாக பரந்தனில் இருந்து கிளிநொச்சிவரை நிலைகொண்டுள்ள படையினர் மீது அடிக்கடி தாக்குதல்களை புலிகள் நடத்திக் கொண்டிருப்பர்.

வெலிஓயா மற்றும் வன்னியில் உள்ள படை நிலைகள் மீது புலிகளின் தாக்குதல்கள் மேலும் அதிகமாகக் கூடிய சாத்தியங்கள் தென்படுகின்றன.

வன்னியில் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் தற்காப்புக்கான தாக்குதல் யுத்த வகையானவை.

தற்காப்பு உத்திகள் இரண்டு வகைப்படும். ஒன்று: படைகள் முன்னேறும்போது தடுத்து நிறுத்தித் தாக்குவது; அது தற்காப்பு யுத்தம் என்று அழைக்கப்படும்.

இரண்டு: படைகள் தயாராக முன்னர் படைகளைத் தேடிச் சென்று தாக்குவது; அது தற்காப்புக்கான தாக்குதல் யுத்தம் என்றழைக்கப்படும்.

தற்காப்புக்கான தாக்குதல் யுத்தம் அழித்தொழிப்பு யுத்தமாகவும் வளர்ச்சி பெறும். பரந்தனில் புலிகள் நடத்தியது அழித்தொழிப்பு யுத்தம்.

வன்னியைப் பொறுத்தவரை, தற்காப்புக்கான தாக்குதல் யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டு, ஏனைய போர்க்களங்களில் தாக்குதல்களில் ஈடுபடுவதுதான் புலிகளின் திட்டமாக இருக்கிறது.

### மன உறுதியை குலைப்பது

யாழ். குடாநாட்டில் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் தற்காப்புக்கான தாக்குதல்கள் அல்ல; படையினரின் மன உறுதியைப் படிப்படியாகக் குலைத்து பாரிய ஒரு தாக்குதலுக்கு தயாராவதுதான் யாழ். குடாநாட்டுப் போர் முனையில் புலிகளின் உத்தியாக இருக்கிறது.

உளவியல் ரீதியாக படையினர் தளர்ந்து போகும் கட்டத்தில் பாரிய தாக்குதல்களில் ஈடுபடுவது சுலபமாக இருக்கும் என்று புலிகள் நினைக்கிறார்கள்.

படையினரின் நடமாட்டத்துக்கு அச்சுறுத்தல், பலவீனமான நிலைகளை இனங்கண்டு தாக்குதல், யாழ். குடாநாட்டை சகஜ நிலை நிலவும் பகுதியாக சித்திரிக்க முடியாமல் செய்தல் போன்ற நோக்கங்கள் குடாநாட்டில் புலிகளின் உடனடித் திட்டங்களாக உள்ளன.

படையினரை முகாம்களுக்குள் முடக்கி வைத்திருப்பது, பலவீனமான முகாம்கள் மீது தாக்குவது தற்காலிக தளப் பிரதேசங்களை நிறுவி நிலை கொள்வது, படிப்படியாக அவற்றை விரிவுபடுத்துவது என்பவை கிழக்கில் புலிகளின் தந்திரோபாயங்களாக இருக்கும்.

### படையினருக்கு தலையிடி

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, வடக்கு-கிழக்கில் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் படைக்குவிப்பைத் தடுக்கும் வகையில் படையினரை பல்வேறு திசைகளுக்கு இழுப்பதாக புலிகளின் பிரதான உத்தி அமைந்துள்ளது.

இந்தப் பிரதான உத்தி மூலமாக இராணுவரீதியில் தமது பலத்தை மேலோங்கச் செய்யும் அதே நேரத்தில், தமது பிரதான தளமான வன்னியையும் புலிகள் பாதுகாத்துக் கொள்கிறார்கள்.

எனவே வன்னிப் பகுதியிலும், கிழக்கிலும் புலிகளின் தாக்குதல்கள் மேலும் தீவிரமாகப்போகின்றன.

ஒரே நேரத்தில் வடக்கிலும் கிழக்கிலும் புலிகள் தாக்கும்போது படையினருக்கு மற்றொரு பிரச்சினையும் ஏற்படும்.

புலிகள் முகாம்களைத் தாக்கும்போது, விமானப் படை உதவியைத்தான் படையினர் பிரதானமாக நம்பியிருக்கின்றனர்.

ஒரே நேரத்தில் வடக்கிலும், கிழக்கிலும் புலிகள் தாக்கும்போது விமானப் படை உதவியை ஒன்று குவிந்த நிலையில் வழங்க முடியாமல் போகும்.

புலிகளின் இருமுனைத் தாக்குதல் உத்தியானது படையினருக்கு புதிய தலைவலிதான்!

[நன்றி: தினமுரசு]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள தமிழ் ரைப்ரைட்டர் — பழைய கிபோட் பெரிய Carriage— விற்பனைக்குண்டு. தொடர்பு: உபதபாற் கந்தோர், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (9289)

இறைச்சிக் கோழி(Broiler) மொத்தமாகவும் சில்லறையாகவும், விற்பனைக்குண்டு. வேண்டிய நிறைகளில், காலை 9 மணிவரை சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். குளப்பிட்டி, ஆனைக் கோட்டை றோட், (அரசடி) கொக்குவில் மேற்கு. (சி/145)

**ஒஃன் வகுப்பு**

ஒஃன், புல்லாங்குழல், கிற்றார். வகுப்புகள் வார நாள்களில் மாலை 2 மணியிலிருந்து நடைபெறுகின்றன. முகவரி. 238, கோயில் வீதி, நல்லூர். [ஆலயத்திலிருந்து 300 யார் தெற்கே]. (45043)

**நாடகம் எழுதுவது**

எப்படி என்று விளக்கக் கூறுகின்ற முதலாவது தமிழ் நூல். நாடகத்தைக் கற்கும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்கள், நாடக ஆர்வலர்கள் எல்லோருக்கும் பயன்படக் கூடியது. எழுதியவர், அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை. ரூபா. 50 (45198)

## மகளிர் தின கட்டுரைப் போட்டிகள்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர் மட்டத்தில் கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளது.

கனிஷ்ட இடை நிலை, சிரேஷ்ட இடை நிலை, உயர் நிலை என மூன்று பிரிவுகளாக இப்போட்டி நடைபெறவுள்ளது. (ஐ-11)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு**

**வெளிவாரிப் பரீட்சைகள் - கல்வியாண்டு 1994/ 95**

கீழே தரப்பட்ட பரீட்சைகள் 1997 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பிற்பகுதியில் நடைபெறவுள்ளன.

முதற் கலைத்தேர்வு — 1995

முதல் வர்த்தகத் தேர்வு — 1995

1. விண்ணப்பப் படிவத்தினைப் பெறவிரும்புவோர், யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூ. 15/- இனைச் செலுத்திய மைக்கான பற்றுச்சிட்டைச் சமர்ப்பித்து வெளிவாரி பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ். பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூ. 12/50 பெறுமதியான முத்திரையொட்டப்பட்ட 28x20செ மீ அளவுடைய தபால் உறையையும் அனுப்புதல் வேண்டும்.
3. இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிடமிருந்து 28-2-1997ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பு: மாணவர்கள் தமது பதிவேட்டினை அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்,

**பதிவாளர்,**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி/141)

---

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

அமரர்

**இராசசிங்கம் கிருஷ்ணலிங்கம்**

(விலை மதிப்பீட்டு உத்தியோகத்தர்)

எமது கலைமன்றத்தின் நிர்வாகியாகவும், ஆங்கில ஆசிரியராகவும், பழகுவதற்கு எளிமையானவராகவும், சமயத்தொண்டனாகவும் பணிசெய்த அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய முதல்வி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகளும், மாணவர்களும்

**ஞானசம்பந்தர் கலைமன்றம்**

புலோலி கிழக்கு. (45313)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 12-01-1911 மறைவு: 18-01-1997

அமரர் கைலாயர் நாகமுத்து

( இளைப்பாறிய ஆசிரியர் )

இடைக்காடு தனிலே பிறந்து
ஓராண்டாய் விசுவமடுவிலே வாழ்ந்து
18. 01. 97 இல் இறைவனடியை அடைந்திட்ட
எம் அருமைத் தந்தையின்
ஆத்ம சாந்திக்காக இறைவனைப் -
பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

இடைக்காடு,
அச்சுவேலி. (45327)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 02 — 02 — 1923

இறப்பு: 17 — 02 — 1996

திருமதி

**மிக்கேல்பிள்ளை மரியப்பிள்ளை**

**(மரியாச்சி)**

அழகு முகம் பொன்சிரிப்பு, இனிய வார்த்தை
வரவணைத்தே வரவேற்கும் தூய நெஞ்சம்
பழகுவதற்கு அரியதுணை என்றே - மக்கள்
பாராட்ட அன்புருவாய் பிறந்த தாயே!
எம்மிருந்த வாழ்வெமக்கே கொடுத்தாயம்மா
வாஞ்சை மிகும் தலைவனையும் மறந்தாயம்மா-நாம்
உனமுருக நிங்கள் எம்மை விட்டு
மின்னலென பறந்தோராண்டானதம்மா.
ஒரு கணம் தான் உலகமெல்லாம் இருளானதம்மா
எம் தெய்வத்தின் பொன் முகத்தை காணாது
புலம்புகின்றோம் ஆண்டொன்றாகியது
பூம் பதங்கள் சுழுவி நிதம் கடமையாற்ற
என்ன தவம் செய்தோமென்றிருந்த வேளை
இறைவனடி புகுந்தாயோ தெய்வத்தாயே.

சணவன், பிள்ளைகள்,
பருக்கள், பேரப்பிள்ளைகள்.

32, சென்.பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். (45370)

---

வலயம் I இன் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

**திரு. சு. இரத்தினராசா**

அவர்களை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சேவையே இலட்சியமாய் கொண்டு வாழ்வில்
செழுங்கல்வி கலைவளர்த்த செம்மலான
பாவலர் போற்றுங்கல்விப் பணிப்பாளராம்
பண்புநிறை ரத்தினராஜாபெரியோன்
ஆவலுடன் துணிச்சலுடன் நேர்மையோடு
அரசபணி சேவைமூப்பு அனைத்தும் கொண்டே
தேவையுணர் சேவைசெய்யும் பெரியோன் வாழி!
தெய்வீக அருளாலே நீடு வாழி!

அதிபர், ஆசிரியர்கள் ,மாணவர்கள்,
பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

**யா/இணுவில் இந்துக்கல்லூரி.**

(45294)

---

## சேவை நலம் பாராட்டு



**திரு. இ. புசுபதி**

**(விவசாய போதனாசிரியர், விவசாய திணைக்களத்தில் 35 வருட கால சேவையின் பின் ஓய்வு பெற்றுள்ளார்)**

வடமராட்சி விவசாயிகள் தோழனாக, நெருக்கடியான காலகட்டத்தில், உடல் நலனைப் பேணாது, பதவி உயர்வைக் கருத்திற் கொள்ளாது தன்னை மக்கள் சேவைக்காக அர்ப்பணித்த உத்தம அரச ஊழியரைப் பாராட்டுகின்றோம்.

**திரு. கோபிநாத்** அவர்களும் அதே பாணியில் சேவையாற்ற வேண்டும் என வாழ்த்தி, வரவேற்கின்றோம்.


**ஊற்று நிறுவனம்,**

**புலோலி.**

(45245)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 22 — 12 — 1942

ஆண்டவன் அடியில்: 13 — 03 — 1995

குப்புசாமி முருகையா

(உரிமையாளர் லக்சுமி பவான் - புன்னாலைக்கட்டுவன், ஆரியபவான் - கோண்டாவில்)

**திதி: 17 - 2 - 97**

இனிமையான குரல் என்போம் அதுவும் போச்சே
வீமன் போல் வருகின்றார் வீணாய் போச்சே
நாலும் பெற்றேன் எனக்கென்ன என்பீர்
நாலுபக்கம் நின்று இன்று கதறுகின்றோம் அப்பா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:

மனைவி - முருகையா சரோஜினி,
பிள்ளைகள் - மு. சுகந்தினி, மு. கேதீஸ்வரி,
மு. ராஜேஸ் கண்ணா, மு. கோகிலவாணி.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (45318)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உணவு முத்திரை நிறுத்தம்

வசதி குறைந்த, வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த வறுமை நிவாரண — உணவு முத்திரை — கொடுப்பனவுகள் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுத்தப்பட்டு விட்டன.

இதனால் பல நூற்றுக்கணக்கான ஏழைக் குடும்பத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஏழைகள் என்பதால், வசதி குறைந்தவர்கள் என்பதால், செல்வாக்கு இல்லாதவர்கள் என்பதால், அவர்களின் குறைகளைக் கேட்டு, நிவர்த்தி செய்வதற்கு எவரும் இல்லை.

யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் அரசாங்க அதிகாரிகளில் பலர் இதே பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே. ஆயினும் இங்குள்ள மக்களின் நலன் நாடி உழைப்பவர்கள் மிகக் குறைவு.

அதிகாரிகளைக் கண்டிக்க வேண்டும் என்பதற்காக நாம் இதனை எழுதவில்லை. உண்மை அது என்பதால், கசப்பாக இருந்தாலும், சொல்லவேண்டியுள்ளது.

கொழும்பிலிருந்து அல்லது திருகோணமலையிலிருந்து அங்குள்ள அதிகாரிகள் அனுப்பும் உத்தரவுகளையும், அறிவித்தல்களையும், சுற்றறிக்கைகளையும் தலைமேல் சுமந்து செயற்படுத்துவதே இங்குள்ள அதிகாரிகளின் பணியாகிவிட்டது; பழக்கமாகிவிட்டது.

இந்தப் பிரதேசத்தின் தள நிலையை நேரில் அறிந்தவர்கள் என்ற உரிமையுடன், மக்கள் நலனை முன்னிறுத்தி கொழும்பு உத்தரவுகள், அறிவுறுத்தல்களின் சாதக பாதகங்களை 250 மைல்களுக்கு அப்பால் உள்ள அதிஉயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறிப் பணியாற்ற வேண்டும் என்று எண்ணிச் செயற்படும் யாழ்ப்பாணத்து அதிகாரிகள் எத்தனை பேர்?

அரசாங்க உத்தியோகம் மேலதிகாரிகளின் பணிப்புரைகளைச் செயற்படுத்துவதும், அடுத்த நிலை உத்தியோகர்களுக்கு உத்தரவு வழங்குவதும் மட்டுமன்று; மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு நிர்வாக ரீதியில் உதவுவதும் ஆகும்

வறுமை நிவாரணத்திட்டம் (ஜனசக்தி திட்டம்) பிரேமதாசா காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக இன்றைய அரசு சமுர்த்தித்திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வறுமை நிவாரணத்திட்டம் நிறுத்தப்பட்டு விட்டது உண்மை தான். அங்கெல்லாம் சமுர்த்தி நடைமுறைக்கு வந்து விட்டது.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் சமுர்த்தித் திட்டம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. ஆனால் வறுமை நிவாரணம் நிறுத்தப்பட்டு விட்டது. சமுர்த்திஅமுலுக்குவருவதற்கான காற்றசைவைக் கூட இங்கு காணமுடியவில்லை.

இது யாழ்ப்பாணத்து ஏழைமக்களின் வயிற்றில் அடிக்கும் செயல். மக்களுக்காகச் சமுர்த்தியா? சமுர்த்திக்காக மக்களா? - என்று அந்த ஏழைகள் கேட்கிறார்கள்.

யாழ்ப்பாணத்து அதிகாரிகளே உங்கள் பதில் என்ன? கொழும்பு அதிகாரிகளின் காதுகளுக்குள்ளும் இந்தக் கேள்வியை ஊதிவிடுங்கள்!

# இப்போது தீர்வைக் காணாவிட்டால் பின் பெரிய விலை கொடுக்க நேரிடும்!

## தனது கடைசிப் பேட்டியில் நாலந்தா எல்லாவெல

கொழும்பு, பெப். 17

''ஒரு சண்டையில் 10 புலிகளும், 2 படையினரும் கொல்லப்பட்டனர் என அறிக்கை விட்டு நாம் வெற்றியீட்டி விட்டோம் என்று கூறுகிறோம் — இது வேதனை தரும் ஒரு விடயமாகும். இத்தகைய யுத்த மனப்போக்கு மாறவேண்டும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும். இளைஞர்களின் உயிர்களைக் காக்க அதுவே ஒரே வழியாகும்.''

படுகொலை செய்யப்பட்ட இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லா வெல இவ்வாறு தனது கடைசிப் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

படுகொலை செய்யப்படுவதற்கு இருவாரங்களுக்கு முன் அவர் 'த ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்று நேற்றைய ஞாயிறு பதிப்பில் வெளியாகியிருந்தது. அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இளைஞர்களைக் சட்டாய இராணுவ சேவைக்கு சேர்ப்பதை நான் எதிர்க்கிறேன். நானும் ஓர் இளைஞன். போராளியும் ஓர் இளைஞன் தான்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 30 கோடி ரூபாவுக்கு சொத்துக்கள் நாசம்

கொழும்பு, பெப் 17

இரத்தினபுரியில் அரசுத் தரப்பு ஆதரவாளர்கள் மேற்கொண்டதாகக் கூறப்படும் தீவைப்பு மற்றும் தாக்குதல் சம்பவங்களினால் முப்பது கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளன என்று ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இந்த நஷ்டத்துக்கான இழப்பீட்டை சம்பந்தப்பட்டோருக்கு வழங்குமாறு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சைத் தாம் கோரவிருப்பதாகவும் ரணில் தெரிவித்தார்.

(உ-3-150)

## பொலீஸார் மீது ஆத்திரம்திரும்பியது

கொழும்பு, பெப்ரவரி 17

நாலந்தா எல்லாவெலவின் இறுதிக்கிரியைகள் சனியன்று நடந்த பின்னர் ஏற்பட்ட வன்செயல்களில், 28 பொலீஸ் வாகனங்கள் சேதமடைந்தன என்று இரத்தினபுரி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பிரதாப்சிங் தெரிவித்தார்.

எல்லாவெலவின் படுகொலை காரணமாக கோபத்துக்குள்ளான மக்கள், ஆத்திரமடைந்து இரத்தினபுரிப் பொலீஸ் நிலையத்தைக் கற்களால் தாக்கினர். இரு தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற கைகலப்பில் சாதாரண பிரஜை ஒருவர் இறந்தார். 10 பொலீஸாருக்குக் காயம் ஏற்பட்டது. ஒரு பொலீஸ் உத்தியோகத்தரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்போது நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதோடு நகரம் வழமைக்குத் திரும்பியதாக அறிவிக்கப்பட்டது.

குருவிற்ற பொலீஸ் நிலையம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. ஆயிரத்துக்கும் அதிகமானோர் இதில் பங்கு கொண்டதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில் —

இரத்தினபுரியில் இரு கும்பல்களுக்கு இடையில் நிகழ்ந்த கலவரத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன் 35 பேர் காயமடைந்தனர் என்றும் —

வன்முறைக் கும்பலைக் கட்டுப்படுத்துவதற்காக பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள வேண்டிய சட்டாயம் ஏற்பட்டது என்றும் —

இந்திய வானொலி அறிவித்தது.

இதே சமயம் —

இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்றுக் காலை தளர்த்தப்பட்ட ஊரடங்கு நேற்று மாலை 6-30 மணிக்கு மீண்டும் பிறப்பிக்கப்பட்டது. அது இன்று காலை 6-30 மணி வரை நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## படப்பிடிப்பாளர்கள் மீதும் தாக்குதல்!

கொழும்பு, பெப். 17

நாலந்தா எல்லாவெலவின் இறுதிக் கிரியைகளைப் படம்பிடிக்கசென்றதமதுநிறுவனத்தின்படப்பிடிப்பாளர்களும் செய்தியாளர்களும் பொலீஸாரால் தாக்கப்பட்டதாகவும், அவர்களின் கருவிகளை பொலீஸார் சேதப்படுத்தியதாகவும் 'எம்.ரி வி.'என்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக இரத்தினபுரி பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியிடம் வினாவியபோது, பொலீஸார் அத்தகைய தாக்குதல் எதையும் நடத்தவில்லை என்று தெரிவித்தார்.

அங்கு கூடியிருந்த கூட்டத்தினர் மத்தியில் ஏற்பட்ட சலசலப்பின் போது பொதுமக்கள் தொலைக்காட்சி குழுவினரை கற்களால் தாக்கினார்களா என்பது குறித்து தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

பொலீஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் நடந்த மோதல் சமயத்தில், செய்தியாளர்கள் தாக்கப்பட்டிருக்கக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக எழுந்துள்ள பிணக்கைத் தீர்க்கும் முயற்சியில் தகவல் தொடர்பு சாதன அமைச்சு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## ஸ்ரீகோத்தா முன் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, பெப். 17

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.20 மணியளவில் ஐ. தே. கட்சியின் தலைமையகமான கொழும்பு ஸ்ரீகோத்தாவில் ஐ. தே. கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தமது கட்சி சார்பில் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் ஆயிரத்து 500 வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்த சமயம், ஸ்ரீகோத்தாவுக்கு வெளியே சுமார் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் கூடி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களே இவ்வாறு சுலோக அட்டைகளைத் தாங்கி கோஷங்களை எழுப்பி ''கொலையாளிகளை வெளியே விடு!'' என்று ஆக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் மூன்று பேர் பொலீஸாரால் கைது!

கொழும்பு, பெப். 17

இரத்தினபுரி எம்.பியான நாலந்தா எல்லாவெலவின் கொலை தொடர்பாக மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினரும், எகலியகொட பொலீஸாரும் இவர்களைக் கைது செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் எதிர்வரும் புதன்கிழமை அடையாளம் காண்பதற்காக அணிவகுப்பு ஒன்றுக்கு உட்படுவார்கள் என்று பொலீஸ் இன்ஸ்பெக்டர் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதற்கு முன்னர் இந்த விடயம் தொடர்பாக ஏழுபேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மற்றுமொரு முக்கிய சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் சுஸந்த புஞ்சிநிலமே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் பொலீஸில் சரணடைய இருந்ததாக ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் எல்லாவெல படுகொலைச் சந்தேகநபர்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உதவி வழங்கக் கூடிய சட்டரீதியான வாய்ப்புக்கள் இல்லை என்று சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவர் கூறியுள்ளார்.

தற்போது சந்தேகநபர்களுக்கு உள்ள ஒரேவழி பொலீஸில் நேரடியாகச் சரணடைவதுதான் என்று பொதுமக்கள் ஐக்கியமுன்னணியினரும், ஐ. தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூறியுள்ளதாக ரூபவாஹினி குறிப்பிட்டது.

(உ-3)

### முக்கிய சந்தேக நபர்

## பொலீஸ் ஜீப்பிலேயே தப்பிச் சென்றார்?

கொழும்பு, பெப்.17

இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெலவைச் சுட்டுக் கொலை செய்ததாகக் கூறப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் சுஸந்த புஞ்சிநிலமே அந்தச் சம்பவத்துக்குப் பின்னர் பொலீஸ் ஜீப்பில் தப்பியுள்ளார் என தற்போது தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக பொலீஸார் உள்ளக விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

புஞ்சிநிலமேயின் மெய்ப் பாதுகாவலராகப் பணியாற்றிய பொலீஸ் சார்ஜண்ட் ஒருவரே பொலீஸ் ஜீப்பை எடுத்து வந்துள்ளார் என்றும் —

இந்தச் சம்பவத்தின் பின் அந்தப் பொலீஸ் சார்ஜண்ட் நேற்று வரை வேலைக்கு சமுகமளிக்கவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் கொலைச் சம்பவத்துக்குப் பின்னர் சுஸந்த புஞ்சிநிலமே கொள்ளுப்பிட்டியில் உள்ள ஐ.தே.கட்சித் தலைமையகமான ஸ்ரீகோத்தாவுக்குச் சென்றுள்ளார் என்றும் ஒரு தகவல் வெளியானது.

தனது தற்பாதுகாப்புக்காகவே தாம் நாலந்தா எல்லாவெலவைச் சுட்டதாகவும் —

தான் அணிந்திருந்த குண்டு துளைக்காத 'ஜக்கட்டில்' காயம் இருப்பதாகவும்—

(8 ஆம் பக்கம் பார்க்க)

### உறவினர்கள் வேண்டியதால்

## சபையில் சடலம் வைக்கப்படவில்லை!

கொழும்பு, பெப். 17

படுகொலை செய்யப்பட்ட இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்தா எல்லாவெலவின் பூதவுடலை அஞ்சலி நிகழ்ச்சிக்காக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாயினும், அம்முயற்சி இறுதி நேரத்தில் கைவிடப்பட்டதாகத் தெரியவருகின்றது.

பூதவுடலை நாடாளுமன்றத்தில் வைப்பதற்கு சபாநாயகர் அனுமதி வழங்கினார்.

நாலந்தா எல்லாவெலவின் உறவினர்கள் பூதவுடலை ஐ. தே. கவினர் பார்வையிடக் கூடாது எனத்தடை விதித்தனர். இதனால் நாடாளுமன்றத்தில் வைக்கும் முயற்சி கைவிடப்பட்டது.

நாலந்தா எல்லாவெலவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை அடுத்த மாதம் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. அன்று சபையில் காரசாரமான விவாதம் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் படையினருக்கு இது நல்ல காலம் அல்ல!

## 'த ஐலண்ட்' கருத்து

கொழும்பு, பெப் 17

''இந்த ஆண்டு விமானப் படைக்கு நல்ல காலம் இல்லைப் போல் தெரிகிறது'' என்று — 'த ஐலண்ட்' பத்திரிகையின் ஞாயிறு பதிப்பு கருத்து தெரிவித்துள்ளது.

ஜனவரி 17 இல் வேவு விமானம் வீழ்ந்ததும் —

ஜனவரி 20 இல் காங்கேசன் துறை கடலில் 'வை - 12' ரக விமானம் காணாமற் போனதும் —

ஜனவரி 21 ஆம் திகதி நீர்கொழும்பு கடலில் ''கிபிர்'' விமானம் வீழ்ந்ததும் —

டிசம்பர் 7 இல் பம்பைமடுவில் ஹெலி ஒன்று தகர்க்கப்பட்டதும் —

விமானப்படை விமானம் கியூபா கப்பலை பிழையாகத் தாக்கியதும் —

வருட ஆரம்பமே விமானப் படைக்கு நல்லதாக அமையவில்லை என்பதையே காட்டுகின்றது.

94 ஆம் ஆண்டு விமானப் படைத் தளபதியாக ஒலிவர் ரணசிங்க சரியான — சுப நேரத்திலேயே — பதவி ஏற்றார். ஆனால் இப்போது அவரது கிரகங்கள் சரியான பலனைக் கொடுக்கவில்லைப் போலும்!

கியூபா கப்பலை விமானப் படை தாக்கியது குறித்து இலங்கை அரசு — எவரும் ஒப்பமிடாத — இரண்டு பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டதுடன் சரி. வேறு ஒரு கருத்தையும் இலங்கை அரசு தெரிவிக்கவில்லை.

அலம்பிலுக்கு சுமார் 10 மைல் தூரத்தில் வைத்தே கப்பல் தாக்கப்பட்டதாக இலங்கை அரசு கூறியது ஆனால் 40 மைல்களுக்கு அப்பால் வைத்தே கப்பல் தாக்கப்பட்டதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. இதையே கப்பலின் கப்டனும் தெரிவித்தார் — என்று அப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-3-150)

## வவுனியாவிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைஎடுப்பின் இலக்காக இருக்கக்கூடும் என செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

படையினரிடமிருந்து கைப்பற்றிய ஆட்லறிப் பீரங்கிகளைக் கொண்டு வவுனியா நகரை இலக்குவைத்து அவ்வப்போது தாக்குதல்களை நடத்த புலிகள் முற்பட்டு வருவதால், வவுனியா நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அவசர தேவை படையினருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் —

இதற்காக மேற்படி பீரங்கிகள் மூலம் வவுனியா நகரைத் தாக்கமுடியாத தூரத்துக்கு அப்பால் புலிகளை விலத்தி வைத்திருக்கவேண்டிய கட்டாய நிலைக்குப் படையினர் தள்ளப்பட்டுள்ளதாகவும் —

பீரங்கிகளின் இலக்கு வவுனியாவுக்கு எட்டமுடியாத தொலைவுக்குப் புலிகளை பின்தள்ளச் செய்வதே உத்தேச படை நடவடிக்கையின் நோக்கமாக இருக்கக்கூடும் எனவும் பாதுகாப்பு அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்ட 'சூரியப்பிரகாசம்' படை நடவடிக்கைக்கு முன்னர் குடாநாட்டில் 'முன்னேறிப் பாய்தல்' படை நடவடிக்கையை அரசுத் தரப்பு மேற்கொண்டிருந்தது.

அது போன்று, வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி மேற்கொள்ளப்படவிருக்கும் உத்தேச படை நடவடிக்கைக்கு முன்பாகவே வவுனியாவிலிருந்து வடமேற்கு நோக்கி 'எடிபல' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்கிடையில் —

வவுனியாவில் இராணுவத்தின் அசைவுகளை அவதானித்த வண்ணம் விடுதலைப் புலிகள் தயாராக நிற்பதாகவும் —

இலங்கை அரசு தற்போது வவுனியாவில் தொடுத்துள்ள படை நடவடிக்கைக்கு பெரும் விலையை அது கொடுக்கப் போகிறது என்றும் —

விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. (உ-3)

## இப்போது தீர்வைக்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று தமிழர் பிரச்சினை பெரிய பிரச்சினையாக மாறியதற்கு ஐ. தே. க. - சுதந்திரக்கட்சி இரண்டுமே காரணமாகும். அதிகாரப் பரவலாக்கலை ஒவ்வொரு கட்டத்திலும் சதி செய்து தடுத்தவை அக்கட்சிகள் தான். பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியன இதற்கு உதாரணங்களாகும்.

இனப்பிரச்சினை விடயத்தைக் குறைத்து மதிப்பிட்டதே இன்றைய நிலைக்குக் காரணமாகும். சமாதானத்தை இந் நாட்டில் கொண்டுவர வேண்டுமானால் அதற்கு மிகப் பெரிய விலை கொடுக்கத்தான் வேண்டும். அதை விட வேறு வழியேயில்லை.

இன்று அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டம் நிறைவேற்றப்படாவிட்டால், எதிர் காலத்தில் இப் பிரச்சினைக்கான தீர்வை எங்கு இருந்து ஆரம்பிப்பது என்ற கேள்வி எழும்.

எதிரியை இராணுவ ரீதியாகப் பலவீனப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. அதுவும் தேவை தான். அதே நேரத்தில் பேச்சும் நடத்த வேண்டும்.

சமாதானத் தீர்வை இந்தச் சந்ததியில் காணமுடியாது போனால், அடுத்த தலைமுறை சமாதானத்துக்காக இன்னும் பெரிய விலை கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் — என்று தெரிவித்திருந்தார். (உ-3-150)

## ஸ்ரீ கோத்தா முன்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரோஷமாகக் கத்தினர்.

''இன்று நாலந்தா; நாளை யார்?'', ''மிஸ்டர் பரிசுத்தமானவரே! உமது கைகளில் இரத்தக்கறை'', ''ஸ்ரீகோத்தா நாட்டின் கனத்தையா?'' — என்றும் அவர்கள் கோஷமிட்டனர்.

இது குறித்து ரணில் தொலைபேசி மூலம் உடனடியாக பொலீஸ்மா அதிபருக்கு முறையிட்டார்.

கொலைச் சந்தேக நபர்கள் இருவர் ஸ்ரீகோத்தாவில் ஒளித்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்று பிரதிப் பொலீஸ் மா அதிபர் ரணிலிடம் கூறினார்.

''தேவையானால் நீங்கள் இங்கு வந்து தேடலாம்'' என்று ரணில் பதிலளித்தாராம். அதன்பின் பொலீஸ் குழு ஒன்று வந்து அங்கு தேடுதல் நடத்தியது. அருகில் இருந்த ஜாதிக சேவ சங்கமயவின் அலுவலகத்திலும் பொலீஸார் தேடுதல் நடத்தினர். கொலைச் சந்தேக நபர்கள் அங்கு இல்லை எனப்பொலீஸார் தெரிவித்ததும், ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். (உ-3-150)

## சந்திரிகா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாண்டு பிறந்ததை ஒட்டி தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த விசேட செய்தி ஒன்று 'கண்ணியமான சமாதானத்தை நோக்கி' என்ற தலைப்பில் தற்போது அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் இடம்பெற்றவை தொடர்பாக அரசுத் தரப்புக் கருத்துக்களை ஜனாதிபதி அதில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதன் ஒரு பகுதியில் —

''இக்காலகட்டத்தில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை உருவாக்குவதற்கு அவசியமான அரசியல் தீர்வு யோசனைகள் பற்றி கருத்துப் பரிமாறிக்கொள்வோம் என்று பிரேரித்துப் பல கடிதங்கள் என்னால் அனுப்பப்பட்டன. அரச தூதுக்குழுக்களின் மூலமாகவும் இது குறித்துச் செய்திகளை அனுப்பினேன். இக்கடிதங்களை வாசிக்கும் சந்தர்ப்பம் உங்களுக்கு வெகுவிரைவில் கிட்டும். ஆனால் திரு. பிரபாகரன் தொடர்ச்சியாக அரசியல்தீர்வுப் பிரேரணைகள் பற்றி பேச்சுவார்த்தைகளை நடத்துவதை நிராகரித்து வந்தார்.

திடீரென ஏற்படுத்தப்பட்ட ஒரு தீர்மானத்துக்கு அமைய அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பகிரங்கமாகப் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவில்லை. சமாதான காலகட்டத்தில் (எட்டு மாதங்கள்) திரு. பிரபாகரனும் நானும் 43 கடிதங்களைப் பரிமாறிக் கொண்டுள்ளோம். வடக்கில் துன்பப்படும் அப்பாவி மக்களுக்கு நிலையான சமாதானத்தைக் கொணரும் அரசியல் தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதும் வடக்கில் அபிவிருத்திக்கான விரிவானவொரு திட்டம் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் மேற்படி கடிதங்கள் மூலமாக வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அறிவிக்கப்பட்டது.

— என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## கைதான மற்றும் விடுதலையான மேலும் 8 பேரின் விவரங்கள்

### ஈ.பி.டி.பி. வெளியிட்டது

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் மற்றும் விடுதலையானோரில் மேலும் 8 பேரின் விவரங்களை யாழ். ஈ. பி. டி. பி. அலுவலகம் வெளியிட்டுள்ளது.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ சுப்பிரமணியம் சுதாகர் — மட்டுவில், மிருசுவில்.

★ நீலகண்டன் ராமலிங்கம் — மட்டுவில் வடக்கு.

★ குலேந்திரன் இரத்தினம் — கைதடி.

★ சின்னத்தம்பி புஸ்பநாயகம் — அல்லாரை வடக்கு, கொடிகமம்.

★ அருணாசலம் அருணகிரிநாதன் — மறவன்புலவு. இவர் 12-12-96 இல் அநுராதபுரம் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டார்.

★ திருநாவுக்கரசு சர்வேஸ்வரன் — சாவகச்சேரி. இவர் 11-12-96இல் அனுராதபுரம் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டார்.

★ பிரபாகரன் நாகராஜா — சரவணபவானந்த ஒழுங்கை, கோப்பாய். இவர் 21-12-96 இல் அநுராதபுரம் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டார். (ஐ-3)

## கொழும்பில் சிகிச்சைக்குச் செல்லும் புற்றுநோயாளருக்கு ரூ. 1,000 உதவுதொகை

சண்டிலிப்பாய், பெப்.17

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்பு மகரகமவிலுள்ள புற்றுநோய் வைத்தியசாலைக்கு சிகிச்சைபெறச் செல்லும் புற்று நோயாளர் ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா உதவுதொகை வழங்கப்படவுள்ளது.

வட பிராந்திய லயன்ஸ் கழகங்களின் உதவித் தொகையாக இக் கொடுப்பனவு வைத்தியசாலை பணிப்பாளரினால் வழங்கப்பட்டு வருகின்றது

வட பிராந்தியத்தில் உள்ள லயன்ஸ் கழகங்களினால் இதற்கென வங்கியில் வைப்பிலிடப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா நிதியின் வட்டிப்பணத்திலிருந்து மேற்படி ஆயிரம் ரூபா உதவிப் பணம் வழங்கப்பட்டு வருவதாக லயன்ஸ் கழகங்களின் வட பிராந்தியத் தலைவர் திரு. எஸ். எ. தங்கராஜா தெரிவித்தார். (ஐ-135)

## குடும்பநல சேவையாளரை நியமிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 17

குடாநாட்டில் போதியளவு குடும்பநல சேவையாளர்கள் இல்லாத காரணத்தால் வீணான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இந் நிலையைத் தடுக்க போதியளவு குடும்ப நலசேவையாளர்களை உடன் நியமிக்க ஆவன செய்ய வேண்டும்.

யாழ். சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு மேற்கண்ட கோரிக்கையை சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌசியிடம் விடுத்துள்ளது.

குடாநாட்டில் இரவு நேரம் ஊரடங்கு அமுல் செய்யப்படுவதாலும், போக்குவரத்துப் பாதைகள் மூடப்படுவதாலும், அவசர நோயாளர்கள் குறிப்பாக கர்ப்பிணிகள் அவசரமாக ஆஸ்பத்திரிகளுக்கு செல்ல முடியாதுள்ளது.

இதன் காரணமாக வீணான உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன.

கிராமங்களில் குடும்பநல சேவையாளர்கள் இருந்தால் இந்த உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியும்.

ஆகவே உடனடியாக குடும்பநல சேவையாளர்களை நியமிக்கவும் —

இப்படி அந்த அமைப்பு அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளது. (ஐ-3)

## தலைநகருக்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதி உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் — இந்த உல்லாச விடுதியும், 'சைனீஸ் ரெஸ்டூரன்ற்றும்' உள்ளன.

சுமார் முப்பது பேரைக் கொண்ட — ஆயுதம் தாங்கிய — குழு ஒன்று இரு வாகனங்களில் நேற்று முன் தினம் இரவு அங்கு திடீரென வந்திறங்கி உணவு மற்றும் உல்லாச விடுதியை அடித்து நொறுக்கியது அங்கிருந்த பணத்தையும் அக்குழு கொள்ளையிட்டுச் சென்றதாகக் கூறப்பட்டது.

பலத்த பாதுகாப்பு மற்றும் பல்வேறு காவல் தடைமையங்களைத் துப்பாக்கி ஏந்தியவாறே வாகனங்களில் கடந்து வந்து தாக்குதல் நடத்தி விட்டு எளிதாகத் திரும்பிச் செல்வதற்கு இந்தக் குழுவினர் அனுமதிக்கப்பட்டிருப்பது ஆளும் கட்சியின் அரசியல் வன்முறைப் போக்கையே காட்டுகிறது என்று ஆசிய நாட்டு ராஜாங்க அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அரசியல் வன்முறை கொழும்பு நகருக்குள் பரவி விட்டது குறித்து வெளிநாட்டு ராஜதந்திரிகள் கவலையும், அதிருப்தியும் வெளியிட்டுள்ளார்கள்,

(மேலும் விவரங்கள் 7 ஆம் பக்கத்தில்) (உ-3)

## பொலீஸ் ஜீப்பிலேயே...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புஞ்சிநிலமே அங்கு இருந்தவர்களிடம் தெரிவித்தாராம். தனது ஜக்கெட்டில் இருந்த அடையாளத்தை அங்கிருந்தவர்களிடம் அவர் காட்டியதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இதே சமயம் —

சந்தேக நபர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முடியாதளவுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை தெரிவித்துள்ளார். (உ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 29 இல் [illegible] கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17 - 02 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org